**ஏப்ரல் – 27**

# TNPSC துளிகள்

- முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியின் நினைவாக கும்பகோணத்தில் ஒரு புதிய பல்கலைக்கழகம் நிறுவப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- தமிழ்நாடு அரசானது, குடிமைப் பணிகள் தேர்வுக்குத் தயாராகும் 500 விண்ணப்ப தாரர்கள் தங்கிப் பயிற்சி பெறும் வகையில் சென்னையின் ஷெனாய் நகரில் ஒரு உறைவிடப் பயிற்சி மையத்தினை நிறுவ உள்ளது.
- தமிழக மாநில அரசின் நிதித் துறையானது, தமிழர் நிதி நிர்வாகம்: தொன்மையும் தொடர்ச்சியும் (Tamilar Nidhi Nirvakam: Thonmaiyum Thodarchiyum) என்ற ஒரு இதழினைச் சமீபத்தில் வெளியிட்டுள்ளது.
- காரியா தெய்வத்தை கௌரவிக்கும் ஒரு சமய விழாவான காரியா பூஜை திரிபுராவில் கொண்டாடப்படுகிறது.
- அயர்லாந்தின் கார்லோவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பங்கஜ் அத்வானியை வீழ்த்தி, இந்தியாவின் சௌரவ் கோத்தாரி 2025 ஆம் ஆண்டு IBSF உலக பில்லியர்ட்ஸ் பட்டத்தினை வென்றுள்ளார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள் உச்சி மாநாடு 2025





- 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு புத்தொழில் உச்சி மாநாடு ஆனது சமீபத்தில் நடத்தப் பட்டது.
- 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை, தமிழ்நாட்டில் 2,032 புத்தொழில் நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தன.
- தற்போது, இந்த எண்ணிக்கையானது 10,800க்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
- இவற்றில் சுமார் 50% நிறுவனங்கள் பெண்களால் நிறுவப்பட்டவையாகும்.
- இந்த நிதியாண்டில் தூத்துக்குடியில் ஒரு பிராந்தியப் புத்தாக்க மையமானது நிறுவப் படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

- கடந்த நான்கு ஆண்டுகளில், ஈரோடு, திருநெல்வேலி, ஓசூர், சேலம், கடலூர், தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் பிராந்தியப் புத்தாக்க மையங்கள் நிறுவப் பட்டுள்ளன.

## 2024-25 ஆம் நிதியாண்டில் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி

- தமிழ்நாடு மாநிலமானது, 2024-25 ஆம் நிதியாண்டில் மின்னணுப் பொருட்கள் மீதான ஏற்றுமதியில் 14.65 பில்லியன் டாலர் என்ற வரலாறு காணாத ஒரு உச்சத்தினை எட்டி உள்ளது.
- இந்தியாவின் மொத்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் தமிழக அரசானது சுமார் 41.23% பங்கைக் கொண்டுள்ளது.
- கடந்த ஆண்டு 9.56 பில்லியன் டாலராக இருந்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் தற்போது 53% வளர்ச்சியானது பதிவாகியுள்ளது.




## மயோனைஸ் மீதான தடை




- தமிழ்நாடு அரசானது, பச்சை முட்டைகளால் செய்யப்பட்ட மயோனைஸ் உற்பத்தி, சேமிப்பு மற்றும் விற்பனையை ஓராண்டிற்குத் தடை செய்துள்ளது.

- இந்த வகை மயோனைஸ் ஆனது, உணவு நஞ்சாதல் விளைவினை ஏற்படுத்தக் கூடிய "அதிக ஆபத்து கொண்ட உணவாக" கருதப் படுகிறது.
- மயோனைஸ் என்பது "முட்டையின் மஞ்சள் கரு, தாவர எண்ணெய், வினிகர் மற்றும் இதர பிற சுவையூட்டிகளைக் கொண்ட ஷவர்மா போன்ற உணவுப் பொருட்களுடன் பரிமாறப் படும் அரை திண்ம பால்மங்கள் " என்று விவரிக்கப்படுகிறது.
- முறையற்றத் தயாரிப்பு மற்றும் சேமிப்பு ஆனது, சால்மோனெல்லா டைஃபிமுரியம், சால்மோனெல்லா என்டெரிடிடிஸ், எஸ்கெரிச்சியா கோலி மற்றும் லிஸ்டீரியா மோனோசைட்டோஜென்கள் ஆகியவற்றின் தாக்கத்திற்கு உட்படுவதால் உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழி வகுக்கிறது.
- ஏப்ரல் 08 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்த இந்த உத்தரவு ஆனது, 2006 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் சட்டத்தின் 30(2)(a)வது பிரிவின் கீழ் செயல் படுத்தப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## HEALD முன்னெடுப்பு




- கல்லீரல் மற்றும் பித்த அறிவியல் கல்வி நிறுவனம் ஆனது HEALD எனப்படும் மிகவும் ஆரோக்கியமான கல்லீரல் குறித்த கல்வி மற்றும் ஆல்கஹால் உட்கொள்வதுடன் தொடர்புடைய கல்லீரல் நோய்த் தடுப்பு முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியது.
- இது இந்தியாவில் கல்லீரல் நோயைக் கையாள்வதை நோக்கமாகக் கொண்ட முதல் வகையான நாடு தழுவிய முன்னெடுப்பாகும்.
- விழிப்புணர்வு, தடுப்பு, மறுவாழ்வு மற்றும் கொள்கை ஒருங்கிணைப்பு மூலம் இந்த நோயைச் சமாளிக்க இந்த முன்னெடுப்பு உதவுகிறது.
- கல்லீரல் பராமரிப்புக்காக மன நல ஆதரவு, சமூகத் தொடர்பு விழிப்புணர்வு மற்றும் கொள்கைச் சீர்திருத்தம் போன்றவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம் மது அருந்துதல் நடவடிக்கையினைச் சார்ந்துள்ள நிலையைக் குறைப்பதையும் இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## சிம்லா ஒப்பந்தம் இடைநிறுத்தம்

- சிந்து நதி நீர் ஒப்பந்தத்தினை இந்தியாவானது நிறுத்தி வைத்ததையடுத்து, சிம்லா

ஒப்பந்தத்தினை நிறுத்தி வைப்பதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

- 1971 ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் போர் ஆனது, வங்காளதேசம் உருவாவதற்கு வழி வகுத்த ஒரு குறிப்பிடத்தக்க மோதலாகும்.
- சிம்லா ஒப்பந்தம் ஆனது, இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கும் பாகிஸ்தான் அதிபர் சுல்பிகர் அலி பூட்டோவுக்கும் இடையே கையெழுத்தானது.
- 1971 ஆம் ஆண்டு போருக்குப் பிறகு, 1972 ஆம் ஆண்டு ஜூலை 02 ஆம் தேதியன்று சிம்லாவில் இது கையெழுத்திடப்பட்டது.
- இந்த ஒப்பந்தத்தின்படி, ஜம்மு-காஷ்மீரில் போர் நிறுத்த எல்லை வரம்பானது எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு என மறுவரையறை செய்யப்பட்டது என்ற ஒரு நிலைமையில் இரு நாடுகளும் அதனை ஒருதலைப் பட்சமாக மாற்றக் கூடாது என்று உறுதியளித்தன.
- அந்தப் போரின் போது கைப்பற்றப்பட்ட சுமார் 13,000 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பை இந்தியா திருப்பி ஒப்படைத்தது.
- இருப்பினும், சோர்பட் பள்ளத்தாக்கில் துர்டுக் மற்றும் தியாக்சி உள்ளிட்ட பல உத்தி சார் பகுதிகளை இந்தியா தக்க வைத்துக் கொண்டது.

**What was the Shimla Agreement?**

**Signed in 1972. Meant to ensure peace.**

After **the 1971 war and Bangladesh's birth, Indira Gandhi and Zulfikar Ali Bhutto** signed the **Shimla Agreement.**

**It aimed to:**


**Resolve disputes** bilaterally (no third party)

**Maintain peace along the LoC**

**Normalize ties:** diplomacy, trade, cultural exchange

**Respect sovereignty and territorial integrity**

## SeaCURE திட்டம்





- கடலில் இருந்து கார்பனை உறிஞ்சுவதற்கான இப்புதிய திட்டம் ஆனது இங்கிலாந்தின்

தெற்குக் கடற்கரையில் தொடங்கப்பட்டுள்ளது.

- SeaCURE எனப்படும் இந்தச் சிறியதான சோதனைத் திட்டம் ஆனது ஐக்கியப் பேரரசு அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுகிறது.
- இந்தத் திட்டம் ஆனது, புவியை வெப்பமாக்கும் கார்பனை கடலில் இருந்து உறிஞ்சுவது திறம் மிக்க செயல்முறையா என்பதைச் சோதிக்கிறது.
- கார்பன் ஆனது, காற்றை விட தண்ணீரில் அதிக செறிவுகளில் காணப்படுகிறது.

## டேவிஸ் நீர்ச்சந்தி பழங்கால சிறு கண்டம்

- டேவிஸ் நீர்ச்சந்தியின் உறைந்த நீர்ப்பரப்பின் கீழ் புதிய நிலப்பரப்பு கண்டறியப் பட்டு உள்ளது.
- இந்த நீர்ச்சந்தியானது, கனடாவில் உள்ள பாஃபின் தீவிற்கும் கிரீன்லாந்து நாட்டிற்கும் இடையிலான குறுகிய கடல் சார் கால்வாய் ஆகும்.
- புதிதாக அடையாளம் காணப்பட்ட இந்த நிலப்பரப்பு ஆனது, தற்போது டேவிஸ் நீரச் சந்தி பழங்கால சிறு கண்டம் என்று அழைக்கப்படுகிறது.
- இது அசாதாரணமான தடிமனான கண்ட மேலடுக்கினால் ஆனது என்பதோடு மேலும், சுமார் 12 முதல் 15 மைல்கள் (சுமார் 19 முதல் 24 கிலோமீட்டர்) அகலம் கொண்டது.
- சிறு கண்டங்கள் என்பது நீண்டு காணப்படும் நிலப்பரப்புகளிலிருந்து பிரிக்கப்பட்ட, ஆனால் முக்கிய கண்டத் தட்டு நகர்வுகளில் முழுமையாகப் பிரிக்கப்படாத கண்ட மேலடுக்கின் துண்டுகளாகும்.
- இந்தப் பழங்கால சிறு கண்டமானது, கிரீன்லாந்து மற்றும் வட அமெரிக்கா பிளவுபட்ட போது அது பகுதியளவு இணைந்துக் காணப் பட்டதாக தெரிகிறது.




# பொருளாதாரச் செய்திகள்

## அந்நியச் செலாவணி கையிருப்பில் தங்கத்தின் பங்கு


- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு 1.5 பில்லியன் டாலர்கள் உயர்ந்து 677.84 பில்லியன் டாலர்களாக உள்ளது.
- இந்தியாவின் கையிருப்பில் முக்கிய அங்கமான அந்நியச் செலாவணிச் சொத்துக்கள் 0.8 பில்லியன் டாலர்கள் அதிகரித்து 574.98 பில்லியன் டாலர்களாக உள்ளது.
- இதற்கிடையில், தங்கத்தின் கையிருப்பு மதிப்பு ஆனது சுமார் 638 மில்லியன் டாலர்கள்

அதிகரித்து 79.9 பில்லியன் டாலர்களாக உள்ளது.


❖ மேலும், சிறப்பு எடுப்பு உரிமைகள் (SDR) என்பது 6 மில்லியன் டாலர்கள் குறைந்து 18.35 பில்லியன் டாலர்களாக உள்ளது.

❖ சர்வதேச நாணய நிதியத்தில் (IMF) இந்தியாவின் கையிருப்பு நிலையானது, சுமார் 43 மில்லியன் டாலர்கள் அதிகரித்து 4.5 பில்லியன் டாலர்களாக உள்ளது.

❖ 2019 ஆம் ஆண்டில் சுமார் 6.7% ஆக இருந்த அந்நியச் செலாவணி இருப்புக்களில் இந்தியாவின் தங்கத்தின் பங்கு ஆனது 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 12% ஆக இரட்டிப்பாகி உள்ளது.




## இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய LCR வழிகாட்டுதல்கள்




❖ Basel III விதிமுறைகளின் பணப்புழக்கப் பரவு விகித (LCR) கட்டமைப்பின் கீழ், இந்திய ரிசர்வ் வங்கி (RBI) இறுதி வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

- இந்தப் புதிய விதிகள் ஆனது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும்.
- இது பண வழங்கீட்டு வங்கிகள், பிராந்தியக் கிராமப்புற வங்கிகள் (RRB) மற்றும் உள்ளூர் வங்கிகள் தவிர அனைத்து வணிக வங்கிகளுக்கும் பொருந்தும்.
- LCR என்பது வங்கி மேற்பார்வைக்கான Basel என்ற குழுவால் உருவாக்கப்பட்ட ஓர் ஒழுங்குமுறைத் தரநிலையாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இஸ்ரோவின் முன்னாள் தலைவர் K. கஸ்தூரிரங்கன்




- 30 ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரோவில் பணியாற்றிய கஸ்தூரி ரங்கன் சமீபத்தில் காலமானார்.
- 1994 மற்றும் 2003 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் அவர் இந்த முக்கிய அமைப்பின் தலைவராக இருந்தார்.
- பாஸ்கரா-I & II எனப்படுகின்ற இந்தியாவின் முதல் இரண்டு சோதனை வழிப் புவிக் கண்காணிப்புச் செயற்கைக்கோள்களின் திட்ட இயக்குநராக இருந்தார்.
- அவர் IRS-1A எனப்படும் முதல் செயல்பாட்டு இந்தியத் தொலை உணர்வு செயற்கைக் கோள் திட்டத்தினை வழிநடத்தினார்.
- அவர் பத்மஸ்ரீ, பத்ம பூஷண் மற்றும் பத்ம விபூஷண் ஆகியவற்றைப் பெற்றவர் ஆவார்.
- டாக்டர் கஸ்தூரிரங்கன் மாநிலங்களவை உறுப்பினராகவும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (UPA) அரசாங்கத்தின் போது அமைக்கப்பட்டத் திட்ட ஆணையத்தின் ஒரு உறுப்பினராகவும் இருந்தார்.
- சமீபத்தில், 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கை வரைவுக் குழுவிற்கு அவர் தலைமை தாங்கினார்.
- மேற்குத் தொடர்ச்சி மலை சூழலியல் பாதுகாப்பு குறித்த கஸ்தூரிரங்கன் குழுவின்

தலைவராகவும் அவர் இருந்தார்.

### 36வது கோல்ட்மேன் சுற்றுச்சூழல் பரிசு 2025

- இந்தப் பரிசுகள் ஆனது ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா, தீவுகள் மற்றும் தீவு நாடுகள், வட அமெரிக்கா மற்றும் தெற்கு மற்றும் மத்திய அமெரிக்கா ஆகிய ஆறு புவியியல் பகுதிகளைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு வழங்கப்படுகின்றன.
- இந்த விருதினைப் பெற்ற ஆப்பிரிக்க நபர் துனிசியாவைச் சேர்ந்த செமியா கர்பி என்பவர் ஆவார்.
- இந்த விருதினைப் பெற்ற ஆசிய நபர் மங்கோலியாவினைச் சேர்ந்த பேட்முங்க் லுவ் சந்தாஷ் ஆவார்.
- இந்த விருதினைப் பெற்ற ஐரோப்பியர் அல்பேனியாவைச் சேர்ந்த பெஸ்ஜானா குரி மற்றும் ஓல்சி நிகா ஆவர்.
- தீவுகள் மற்றும் தீவு நாடுகள் பிரிவில் கேனரி தீவுகளைச் சேர்ந்த கார்லோஸ் மல்லோ மோலினா இந்த விருதினைப் பெற்றுள்ளார்.
- இந்த விருதினைப் பெற்ற தெற்கு மற்றும் மத்திய அமெரிக்க நபர் பெருவைச் சேர்ந்த மாரி லூஸ் கனக்விரி முராயாரி ஆவார்.
- இந்த விருதினைப் பெற்ற வட அமெரிக்க நபர் அமெரிக்காவைச் சேர்ந்த லாரன் ஆலன் ஆவார்.




## விளையாட்டுச் செய்திகள்

### 18 வயதிற்குட்பட்டோருக்கான ஆசியத் தடகளச் சாம்பியன்ஷிப் போட்டி 2025

- சவுதி அரேபியாவின் தம்மம் எனுமிடத்தில் 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற 18 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய விளையாட்டு வீரர்கள் ஒரு தங்கம், ஐந்து வெள்ளி மற்றும் ஐந்து வெண்கலம் உட்பட 11 பதக்கங்களை வென்றுள்ளனர்.

- ஹிமான்ஷு ஜாகர் 18 வயதிற்குட்பட்டோருக்கான ஆசியத் தடகளச் சாம்பியன்ஷிப் போட்டியின் ஆடவருக்கான ஈட்டி எறிதலில் முதல் முறையாக தங்கம் வென்று வரலாறு படைத்துள்ளார்.
- சீனா 19 தங்கம், 12 வெள்ளி மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- அதைத் தொடர்ந்து ஜப்பான் (7) மற்றும் சவுதி அரேபியா (6) ஆகியன உள்ளன.

| GROUP STAGE | Gold | Silver | Bronze | TOTAL |
|---|---|---|---|---|
| 1. CHINA | 19 | 12 | 5 | 36 |
| 2. JAPAN | 3 | 3 | 1 | 7 |
| 3. SAUDI ARABIA | 3 | 1 | 2 | 6 |
| 4. UZBEKISTAN | 2 | 5 | 4 | 11 |
| 5. QATAR | 2 | 3 | 1 | 6 |
| 6. HONG KONG | 2 | 0 | 1 | 3 |
| 7. UNITED ARAB EMIRATES | 2 | 0 | 0 | 2 |
| 8. INDIA | 1 | 5 | 5 | 11 |
| 9. SRI LANKA | 1 | 3 | 4 | 8 |
| 10. SINGAPORE | 1 | 2 | 2 | 5 |

## ISSF உலகக் கோப்பை 2025 - லிமா





| #POS | TEAM | GOLD | SILVER | BROZNE | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1. | CHINA | 4 | 3 | 6 | 13 |
| 2. | USA | 4 | 2 | 1 | 7 |
| 3. | INDIA | 2 | 4 | 1 | 7 |
| 4. | CZECHIA | 2 | 0 | 1 | 3 |
| 5. | NORWAY | 1 | 2 | 0 | 3 |
| 6. | ITALY | 1 | 1 | 1 | 3 |
| 7. | AUSTRALIA | 1 | 0 | 0 | 1 |
| 8. | GUATEMALA | 0 | 1 | 1 | -- |

- பெரு நாட்டில் லிமா நகரில் நடைபெற்ற ISSF உலகக் கோப்பைப் போட்டியில் இந்தியத் துப்பாக்கி சுடும் வீரர்கள் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளனர்.
- இந்தியாவின் பதக்க எண்ணிக்கையானது இரண்டு தங்கம், நான்கு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலம் உட்பட ஏழு ஆகும்.

- இதில் அமெரிக்கா ஏழு பதக்கங்களைப் பெற்றுள்ளது என்பதோடு அமெரிக்கா அதிக தங்கப் பதக்கங்கள் எண்ணிக்கையுடன் இந்தியாவை முந்தி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- சீனா நான்கு தங்கம், மூன்று வெள்ளி மற்றும் ஆறு வெண்கலப் பதக்கங்களுடன் இந்தப் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

# முக்கிய தினங்கள்

## தேசிய தீயணைப்புப் பணிகள் தினம் 2025 - ஏப்ரல் 14




- 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் தேதியன்று மும்பையில் உள்ள SS போர்ட் ஸ்டைகின் என்ற ஒரு கப்பலில் ஏற்பட்ட தீயானது ஒரு மாபெரும் வெடிப்பினை ஏற்படுத்தி 66 தீயணைப்பு வீரர்களின் உயிரிழப்பிற்கு காரணமானது.
- இந்தத் தினமானது தீயணைப்பு வீரர்கள் மற்றும் தீயணைப்புப் பணியாளர்களின் துணிவு, அர்ப்பணிப்பு மற்றும் தியாகங்களைக் கௌரவிக்கிறது.
- இந்தத் தினமானது தீ விபத்து பாதுகாப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஒரு விழிப்புணர்வைப் பரப்புவதற்கும், தீயணைப்புப் பணியின் போது உயிரிழந்த பெரும் துணிச்சல் மிக்க தீயணைப்பு வீரர்களை நினைவு கூரும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.


## தீயணைப்புப் பணிகள் வாரம் 2025 - ஏப்ரல் 14 முதல் 20 வரை

- இது உள்துறை அமைச்சகத்தின் தலைமைத் தீயணைப்பு ஆலோசகரின் முதன்மை வழி காட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- தேசியப் பாதுகாப்புச் சபையானது 1999 ஆம் ஆண்டு முதல் இந்தப் பிரச்சாரத்தினை முன்னிலைப்படுத்தி வருகிறது.
- ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் பொதுமக்களிடையே தீ விபத்துக்கள் பற்றிய பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

- 2025 ஆம் ஆண்டிற்கான இந்த வாரக் கொண்டாட்டத்தின் கருத்துரு, "Unite to Ignite, a Fire-Safe India" என்பதாகும்.




## உலக இரத்த ஒட்டுண்ணி நோய் தினம் 2025 - ஏப்ரல் 14





- இந்தத் தினமானது, உலகளவில் மில்லியன் கணக்கான மக்களைப் பாதிக்கும் ஒரு புறக்கணிக்கப் பட்ட வெப்ப மண்டல நோயான இரத்த ஒட்டுண்ணி நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகிறது.
- அமெரிக்க டிரிபனோசோமியாசிஸ் என்றும் அழைக்கப்படுகிறது இந்த நோயானது உயிருக்கு ஆபத்தினை விளைவிக்கக் கூடிய நோயாகும்.
- இது டிரிபனோசோமா க்ரூஸி என்ற ஒரு புரோட்டோசோவா வகை ஒட்டுண்ணியால் ஏற்படுகிறது.
- பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்களில் எந்த அறிகுறிகளையும் இருப்பதில்லை அல்லது மிகவும் லேசான அறிகுறிகள் மட்டுமே காணப்படுவதால், இது "அமைதியான அல்லது அரவமற்ற நோய்" என்றும் அழைக்கப்படுகிறது.
- உலகளவில் சுமார் 7 மில்லியன் மக்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் மேலும் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 10,000 பேர் இந்நோயால் உயிரிழக்கின்றனர்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Prevent, Control, Care: Everyone's role in Chagas disease" என்பதாகும்.

## உலகத் துளிமம் தினம் 2025 - ஏப்ரல் 14


- இந்தத் தினமானது துளிம (குவாண்டம்) அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஊக்குவிக்கிறது.
- இது பிளாங்க் மாறிலியின் முதல் இலக்கங்களான 4.14 என்ற எண்ணின் வடிவமான

ஏப்ரல் 14 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Every Day in 2025” என்பதாகும்.




## இமாச்சலப் பிரதேச தினம் 2025 - ஏப்ரல் 15




- இந்தப் பகுதியில் இருந்த 30 சுதேச அரசுகள் ஆனது ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட்டு, இமாச்சலப் பிரதேச தலைமை ஆணையர் மாகாணமாக 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இது 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று ஒன்றியப் பிரதேசமாக மாற்றப் பட்டது.
- 1970 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதியன்று பாராளுமன்றத்தினால் இமாச்சலப் பிரதேச மாநிலச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- 1971 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதியன்று சிம்லாவைத் தலைநகராகக் கொண்டு

இமாச்சலப் பிரதேசம் 18வது மாநிலமாக நியமிக்கப்பட்டது.

## உலக ஓவிய தினம் 2025 - ஏப்ரல் 15




- இந்தத் தினமானது ஓவியக் கலையின் ஆற்றல், கலாச்சாரப் பன்முகத்தன்மை மற்றும் கலைஞர்களின் பங்களிப்புகளை போற்றும் வகையில் ஏப்ரல் 15 ஆம் தேதியன்று உலகளவில் கொண்டாடப்படுகிறது.
- இந்தத் தேதியானது, லியொனார்டோ டாவின்சி அவர்களின் பிறந்த நாளினை நினைவு கூரும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.
- இது முதல் முறையாக, 2012 ஆம் ஆண்டில் மெக்ஸிகோ நாட்டின் குவாடலஜாராவில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் சர்வதேசக் கலைச் சங்கத்தினால் (IAA) தொடங்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Art for Unity and Healing" என்பதாகும்.

## உலக குரல் தினம் 2025 - ஏப்ரல் 16




- இத்தினமானது முதன்முதலில் பிரேசில் நாட்டில் 1999 ஆம் ஆண்டு பிரேசிலியக் குரல் தினமாக கொண்டாடப்பட்டது.
- இந்தத் தினமானது, குரல் பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக காது, மூக்கு, தொண்டை (ENT) நிபுணர்கள், பேச்சு மொழி சார் தொடர்பு நோயியல் நிபுணர்கள் மற்றும் குரல் வல்லுநர்களால் தொடங்கப்பட்டது.
- 2002 ஆம் ஆண்டில், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த வல்லுநர்கள் இந்த முன்னெடுப்பில் இணைந்தனர் அதனையடுத்து இது அதிகாரப்பூர்வமாக உலக குரல்

தினமாக அறிவிக்கப்பட்டது.

❖ 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Empower Your Voice" என்பதாகும்.

## உலக இரத்த உறையாமை நோய் தினம் 2025 - ஏப்ரல் 17


❖ இத்தினமானது இரத்தப் போக்கு தொடர்பான கோளாறுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.

❖ இது 1989 ஆம் ஆண்டில் உலக இரத்த உறையாமைக் கூட்டமைப்பினால் (WFH) நிறுவப் பட்டது.

❖ இந்தத் தேதியானது இந்தக் கூட்டமைப்பின் நிறுவனரான ஃபிராங்க் ஷ்னாபலைக் கௌரவிக்கும் விதமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

❖ இரத்தக் கட்டிகளை உருவாக்கச் செய்யும் உடலின் திறனைக் குறைத்து நீடித்த ரத்தப் போக்குக்கு வழி வகுக்கச் செய்கின்ற இரத்த உறையாமை நோயானது ஒரு மரபணு / பரம்பரை வழி கடத்து நோயாகும்.

❖ 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Access for All – Women and Girls Bleed Too" என்பதாகும்.




## உலகப் பாரம்பரியத் தினம் 2025 - ஏப்ரல் 18




❖ இந்தத் தினமானது, சர்வதேச நினைவுச் சின்னங்கள் மற்றும் பாரம்பரியத் தளங்கள் தினம் என்றும் அழைக்கப்படுகிறது.

❖ இது கலாச்சாரம் மற்றும் இயற்கைப் பாரம்பரியத்திற்கு மிக மதிப்பளிக்கும் விதமாக அனுசரிக்கப் படுகிறது.

❖ இந்தத் தினமானது, இந்தப் பாரம்பரியத் தளங்களைப் பாதுகாப்பதற்காக எனப் பணி ஆற்றும் நபர்களையும் குழுக்களையும் ஊக்குவிக்கிறது.


❖ இந்தத் தினம் ஆனது 1982 ஆம் ஆண்டில் சர்வதேச நினைவுச் சின்னங்கள் மற்றும்

பாரம்பரியத் தளங்கள் தொடர்பான சபையினால் (ICOMOS) தொடங்கப் பட்டது.

- இது 1983 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தின் நிலவரப் படி, 196 நாடுகளில் 1,223 உலகப் பாரம்பரியத் தளங்கள் உள்ளன.
- இந்தியாவில் 43 உலகப் பாரம்பரியத் தளங்கள் உள்ளன.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Heritage under Threat from Disasters and Conflicts: Preparedness and Learning from 60 years of ICOMOS Actions" என்பதாகும்.

## உலக கல்லீரல் தினம் 2025 - ஏப்ரல் 19

- இந்தத் தினமானது கல்லீரல் ஆரோக்கியம், நோய் தடுப்பு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- இது வளர்சிதை மாற்றம், நச்சு நீக்கம், நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் ஊட்டச் சத்துச் செயலாக்கத்திற்கு கல்லீரல் ஒரு முக்கியமான உறுப்பு என்பதற்கான நினைவூட்டலாக செயல்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Food is Medicine" என்பதாகும்.




## ஐக்கிய நாடுகள் சபையின் சீன மொழி தினம் 2025 - ஏப்ரல் 20




- யுனெஸ்கோ அமைப்பானது, ஐக்கிய நாடுகள் சபையின் ஆறு பெரும் அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றான சீன மொழியைக் கொண்டாடுவதற்காக 2010 ஆம் ஆண்டில் சீன மொழி தினத்தை உருவாக்கியது.
- இந்தத் தினமானது 5,000 ஆண்டுகளுக்கு முன்பு சீன எழுத்துருக்களைக் கண்டுபிடித்த


புகழ்பெற்ற காங்ஜியையும் கௌரவிக்கும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Chinese Language: A Gift Across Time and Space” என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## அக்சவி எண்ணிம கோப்புறை

- அக்சவி எனப்படுகின்ற பேரிடர்களுக்கானத் தனித்துவமான இணையவழி எண்ணிம கோப்புறை இந்தியாவில் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.
- அக்சவி என்பது ஆப்தா சதி விவரன் (பேரிடர் சேத விவரிப்பு) என்பதன் சுருக்கமாகும்.
- இது சமூகங்கள் தங்கள் இழப்புகளை சுயமாக உள்ளிட வாய்ப்பளித்து, அவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்து, எண்ணிம முறையின் மூலம் அவற்றின் முன்னேற்றத்தை வெளிப்படையாகக் கண்காணிக்கிறது.
- இது நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட அனைத்துச் சமூகங்களையும் ஒரே எண்ணிமத் தளத்தில் கொண்டு வரும்.
- ஒவ்வொரு குடும்பத்திற்கும் உருவாக்கப்பட்ட 'இணைய வழிப் பேரிடர் கோப்புரைகள்' தற்போது அரசாங்கத்தின் நீண்ட காலச் சமூக நலத் திட்டங்கள் மற்றும் குறியீட்டு அடிப்படையிலான காப்பீட்டுத் திட்டங்களுடன் இணைக்கப் பட்டுள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★